# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க,*
## *அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையச் சட்டம்*

---

*(2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2018, செத்தெம்பர் மாதம் 07 ஆம் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 20.00** **தபாற் செலவு : ரூபா 45.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க,**
**அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையச்**
**சட்டம்**

[*2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ.ஓ- 46/2017*

**இலங்கையின் புகழ்பெற்ற இசைவல்லுநர், காலஞ்சென்ற பண்டித் வன்னகுவத்தவடுகே டொன் அமரதேவவிற்கு நன்றி செலுத்தும் வகையில் "அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம்" என அழைக்கப்படும் அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையமொன்றைத் தாபித்தலை ஏற்பாடுசெய்வதற்கும்; அதன் குறிக்கோள்களையும் தத்துவங்களையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைத் தாபித்தல்.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் "நிலையம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அமரதேவ அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் என அழைக்கப்படவேண்டியதும் அமரதேவ அசபுவ என அறியப்படவேண்டியதுமான அழகியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும்; அது ஆராய்ச்சி ஆய்வு கூடமொன்று, சுவடிக்கூடமொன்று, நூலகம் ஒன்று மற்றும் நூதனசாலை ஒன்றுடன் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(2) நிலையமானது, (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பெயரினால் இடையறாவழியுரிமையும் பொது இலச்சினையொன்றும்கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அப்பெயரில் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும் படலாம்.

நிலையத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. எக்குறிக்கோள்களுக்காக கூட்டிணைக்கப்பட்ட குழு தாபிக் கப்படுகின்றதோ அப் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாகும்:-

(அ) நிலையத்தின் சாதனங்களைப் பாதுகாத்தல் மற்றும் சுவடிக்கூடத்தில் இடல்;

(ஆ) அழகியல் கற்கைகள் பற்றிய பட்டம் மற்றும் பட்டப்பின் கற்கைநெறிகளின் ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்கு வசதியளித்தல்; அத்துடன்

(இ) (இதனகத்துப்பின்னர் “டபிள்யு.டி. அமரதேவ” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) காலஞ்சென்ற பண்டிதவன்னகுவத்தவடுகே டொன் அமரதேவவின் இசைப் பாங்கை மேம்படுத்துவதற்கு செயலமர்வுகள், விரிவுரைகள் மற்றும் மெச்சுகை நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது வேறு ஏதேனும் விழாவை நடாத்துதல்.

அமைச்சு அல்லது திணைக்களம் முதலியவற்றின் வேலையுடன் முரண்படா திருப்பதை நிலையமானது உறுதிப் படுத்துதல் வேண்டும்.

**4**. நிலையத்தின் குறிக்கோள்கள், நிலையத்தின் வேலை மற்றும் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் அல்லது “அமரதேவ மன்றத்தினால்” ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படுகின்ற ஏதேனும் வேலைக்குமிடையில் ஏதேனும் முரண்பாட்டை உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்

முகாமைச் சபையின் அமைப்பு.

**5**. (1) நிலையத்தின் அலுவல்களின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம், (இதனகத்துப்பின்னர் “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) முகாமைச் சபையொன்றுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(2) சபை, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பதவிவழி உறுப்பினர்கள்-

(i) உயர்கல்வி அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அமைச்சின் பிரதிநிதி ஒருவர்;

(ii) எந்த அமைச்சுக்கு நிலையமானது அப்போதைக்கு குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர்;

(iii) தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள்;

(iv) தேசிய நூலக, ஆவணவாக்கல் சேவைகள் சபையின் தவிசாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள்;

(v) தேசிய நூதனசாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள்; அத்துடன்

(vi) கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது அவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள்.

(ஆ) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்:-

(i) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்;

(ii) பிரதம அமைச்சரினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர்;

(iii) காலஞ்சென்ற டபிள்யு. டி. அமரதேவ அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அதாவது விமலா அமரதேவ, ரன்ஜனா அமரதேவ, பிரியன்வதா அமரதேவ மற்றும் சுபானி அமரதேவ;

(iv) இரண்டாயிரத்து ஏழாம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட ''அமரதேவ மன்றத்தினால்'' பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்; மற்றும்

(v) ''அமரதேவ மன்றத்தின்'' ஒருப்பாட்டுடன் அமைச்சரினால் நியமிக்கப்பட்ட அழகியல் மற்றும் இலக்கியத் துறைகளில் அனுபவம் கொண்ட மற்றும் ஆற்றலைக் காட்டியுள்ள நான்கு உறுப்பினர்கள்;

(3) சனாதிபதி, சபையின் தவிசாளராகவிருப்பதற்கு சபையின் உறுப்பினர்களுள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) பந்தியின் (i) அல்லது (ii) ஆம் உட்பந்தியின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் இறப்பு, பதவிவிலகுகை அல்லது அவர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் மூலம் பதவியை வறிதாக்குகின்றதன் விளைவாக ஏற்படும் வெற்றிடம் ஒன்று, விடயத்திற்கேற்ப சனாதிபதியினால் அல்லது பிரதம அமைச்சரினால் நிரப்பப்படுதல் வேண்டும். வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் முன்னிருந்தவரின் காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப் பகுதிக்கு பதவிவகித்தல் வேண்டும்.

(5) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) பந்தியின் (iii) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பு, பதவிவிலகுகை அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் பதவியை வறிதாக்குகின்றதன் விளைவாக வெற்றிடம் ஒன்று ஏற்படுகின்ற விடத்து, அடுத்துறுகின்ற உறுப்பினர் எஞ்சிய குடும்ப உறுப்பினர் களின் பெரும்பான்மையின் ஒருப்பாட்டுடன் நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நியமிக்கப்பட்டவர் கட்டாயமாக காலஞ்சென்ற பண்டித் டபிள்யு. டி. அமரதேவவின் குடும்ப உறுப்பினரொருவராகவிருத்தலாகாது:

ஆயின், குடும்ப உறுப்பினர்கள் எவரும் சபையில் எஞ்சி யிராதுள்ளவிடத்து, அடுத்துறுகின்ற உறுப்பினர், சபையின் உறுப் பினர்களின் பெரும்பான்மையின் ஒருப்பாட்டுடன் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(6) இரண்டாம் உட்பிரிவின் (ஆ) பந்தியின் (iv) மற்றும் (v) ஆம் உட்பந்திகளின்கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் இறப்பு, பதவிவிலகுகை, உறுப்பினரொருவராக பதவி இல்லாதொழிதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் பதவியை வறிதாக்குகின்றதன் விளைவாக ஏற்படும் வெற்றிடம் ஒன்று, விடயத்திற்கேற்ப அமரதேவ மன்றத்திலிருந்து உறுப்பின ரொருவரை பெயர்குறித்து நியமிப்பதன்மூலம் அல்லது உறுப்பினரொருவரை நியமிப்பதன்மூலம் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு சபையினால் நிரப்பப் படுதல் வேண்டும்.

(7) சபையின் உறுப்பினர்களுக்கு அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிலையத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*சபையின் உறுப்பினர்களின் பதவிக்காலம்.*

**6.** (1) ஐந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) பந்தியில் குறித்துரைக்கப்பட்ட எல்லா உறுப்பினர்களும் பெயர்நியமனம் அல்லது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலப்பகுதி யொன்றிற்கு பதவிவகித்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், அவரது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்கினால், அவரது அடுத்துறுநர், முன்னரே அவரது பதவியை வறிதாக்கினாலேயொழிய அவரது முன்னிருந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(2) சபையின் தவிசாளர் அல்லது வேறு எவரேனும் உறுப்பினர், சுகவீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக ஒரு மாதத்திற்குக் குறையாத காலப்பகுதியொன்றிற்கு தமது பதவியின் கடமைகளைப் புரிவதற்கு இயலாதவராக ஆகுகின்றவிடத்து, வேறொரு ஆள் 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவர் சார்பாக செயலாற்றுவதற்கு நியமிக்கப்படலாம்.

*நிலையத்தின் பணியாட் டொகுதியினர்.*

**7.** (1) நிலையத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி நிலையத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் சபையினால் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

(2) பணிப்பாளர் தலைமையதிபதி, நிலையத்தின் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் பொது முகாமை மற்றும் நிருவாகத்துக்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

(3) நிலையத்தின் முகாமை மற்றும் நிருவாகத்துக்கான அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைப்படுத்தப்பட்ட எண்ணிக்கை சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்களுக்கு, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

**8.** (1) சபையின் கோரிக்கையின்பேரில் பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலர் மற்றும் பொது நிருவாகம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சின் செயலாளரின் சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட் டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

*நிலையத்தின் பணியாட் டொகுதிக்கு பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

(2) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் நிலையத் தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற விடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையில் உள்ள எவரேனும் அலுவலர் நிலையத் தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுகின்றவிடத்து, 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பாகவும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) சபை, குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்காக அரசாங்கத்திற்கு சேவையாற்றுவதற்கு உடன்பட்டுள்ள எவரேனும் ஆளை தொழிலுக்கமர்த்துகின்றவிடத்து, அவ்வாளினாலான நிலையத்திற்கான ஏதேனும் சேவைக்காலப்பகுதி, அத்தகைய உடன்படிக்கையின் கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கான சேவையாக கருதப்படுதல் வேண்டும்.

(5) சபையின் கோரிக்கையின்பேரில், உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்திற்கேற்ப அத்தகைய உறுப்பினர், அலுவலர் அல்லது சேவையாளர் மற்றும் உள்ளூராட்சி சேவை ஆணைக்குழு அல்லது

உள்ளூரதிகாரசபையின் சம்மதத்துடன் நிலையத்தினாலும் உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவினாலும் அல்லது உள்ளூரதிகார சபையினாலும் உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடிய வாறாக ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட அத்தகைய நியதிகளின் மற்றும் நிபந்தனைகளின்மேல் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப் பகுதிக்காக நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதேபோன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(6) சபையின் கோரிக்கையின் பேரில், பகிரங்கக் கூட்டுத்தாப னம் ஒன்றின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், அத்தகைய அலுவலர் அல்லது சேவையாளர் மற்றும் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழுவினரின் சம்மதத்துடன் சபையினாலும் அத்தகைய பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின் ஆளும் குழுவினாலும் உடன்பட்டுக் கொள்ளப்படக்கூடியவாறாக ஓய்வூதிய அல்லது சகாய நிதிய உரிமைகள் தொடர்பானவை உட்பட அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் மேல் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்காக நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதே போன்ற சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(7) எவரேனும் ஆள், இப்பிரிவின் (5) அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழ் நிலையத்தின் பணியாட்டொகுதிக்கு தற்காலிக மாக நியமிக்கப்படுகின்றவிடத்து, அத்தகைய ஆள், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப் போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

நிலையத்தின் தத்துவங்கள்.

**9**. இச்சட்டம் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, நிலையம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) காலஞ்சென்ற பண்டித் டபிள்யு. டி அமரதேவவின் புத்தகங்கள், ஆவணங்கள், கோப்புகள், புகைப்படங்கள், திரைப்படங்கள், வட்டுகள், செவிப்புல, கட்புல நாடாக்கள், குறிப்பிடத்தக்க சொந்த உடைமைகள் மற்றும் அவரின்

சிறுபராய மற்றும் இளமைப்பருவ நினைவுப்பொருட்கள், தனிப்பட்ட அக்கறையுடனான அவரின் ஆக்கங்கள் மற்றும் சேகரிப்புகள் பாதுகாப் பாக வைக்கப்படுவதற்கு அவரால் பெறப்பட்ட அலுவலக முறையான உருவப்படங்கள், மானியக் கொடைகள், அளிப்புகள் மற்றும் கொடைகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் பெறுதல் அத்துடன் அச்சாசனங்களைப் பாதுகாத்தல், சுவடிக்கூடத்தில் இடல், நிருவகித்தல் மற்றும் சாட்சிக்கு வைப்பதற்கு எல்லா வழிமுறைகளையும் எடுத்தல்;

(ஆ) நிலையத்தின் நோக்கங்களுக்காக தேவைப்படுத்தக் கூடியவாறான காணிகள் அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்குவிடல் மற்றும் வாடகைக்குவிடல் அத்துடன் நிலையத்தின் குறிக் கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதென கருதப்படக்கூடியவாறாக அவற்றை கைமாற்றல், விற்றல் அல்லது பரிமாற்றுதல்;

(இ) இங்கு குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக தேவைப் படுத்தப்பட்ட ஏதேனும் கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் புனரமைத்தல் ;

(ஈ) பிணைப் பொறுப்புக்களுடன் அல்லது பிணைப் பொறுப்புகளின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதல் அல்லது நிதிகளைத் திரட்டுதல் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பெறுதல்:

ஆயின், சபை, நிலையத்துக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன் அங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(உ) நாணய, மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப்பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்களை ஆக்குதல், வரைதல், ஏற்றுக்கொள்ளுதல், கழிப்பனவு செய்தல், புறக்குறிப்பிடல், கைமாற்றல், வாங்குதல், விற்றல் மற்றும் வழங்குதல் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்தல், பேணுதல் மற்றும் மூடுதல்;

(ஊ) நிலையத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் நிலையத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக தேவைப்படுத்தப்படாத எவையேனும் நிதிகளை முதலீடு செய்தல் ;

(எ) நிலையத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கு டன் நிலையத்தின் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் நிலையான அல்லது ஏதேனும் நிலையான அல்லது சொந்த ஆதனத்தைப் பொறுப்பேற்றல், ஏற்றுக்கொள்ளல், நிறைவேற்றல், புரிதல் மற்றும் நிருவகித்தல்;

(ஏ) நிலையத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், பதவி நீக்குதல் அல்லது அவர்களது சேவைகளை முடிவுறுத்தல் மற்றும் அவர்களின் மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் எழுத்திலான சட்டங்களின் நியதிகளின்படி அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக் கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதல்;

(ஐ) நிலையத்தின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்கேற்பாடு செய்தல்;

(ஒ) நிலையத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள வேறு உள்நாட்டு மற்றும்வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ; அத்துடன்

(ஓ) நிலையத்தின் குறிக்கோள்களின் முறையான மற்றும் பயனுள்ள நிறைவேற்றுகைக்கு அவசியமானவாறாக அல்லது உசிதமானதாகவாறாக எல்லா வேறு காரியங்களையும் செய்தல்.

நிலையத்தின் விதிகள்.

**10.** (1) பின்வரும் எல்லாக் கருமங்களுக்குமாக அல்லது அவற்றின் எவற்றுக்குமாக இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாததாகவிராத, காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக் கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத பெரும்பான்மையினாலும் விதிகளை ஆக்குதல் சபைக்கு சட்டமுறையாதல் வேண்டும்:-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், விலக்குதல் அல்லது பதவியிலிருந்து நீங்குதல் மற்றும் உறுப்பாண்மை தொடர்பான வேறு ஏதேனும் கருமம்;

(ஆ) சபையின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகள் அல்லது தகைமையீனங்கள்;

(இ) நிலையம் மற்றும் சபையின் கூட்டங்களுக்கு அழைப்பு விடுப்பதற்கும் அவற்றை வைப்பதற்கும் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைமுறை, அத்தகைய கூட்டத்தின் நடப்பெண் மற்றும் சபையின் தத்துவங்கள் மற்றும் கடமைகளின் பிரயோகம் மற்றும் புரிதல்;

(ஈ) நிலையத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் ஊழியர்களின் நியமனம், தத்துவங்கள், கடமை கள் மற்றும் பணிகள்; அத்துடன்

(உ) நிலையத்தின் ஆதனத்தின் நிருவாகம் மற்றும் முகாமை.

(2) சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒரு விதி என்றாற்போன்று அதே போன்ற கூட்டத்திலும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது ஒழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(4) சபையின் உறுப்பினர்கள், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிலையத்தின் விதிகளுக்கு அமைந்தவர்களாதல் வேண்டும்.

*நிலையத்தின் நிதியம்.*

**11.** (1) (இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "அமரதேவ அசபுவ அபிவிருத்தி நிதியம்" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அதன் சொந்த நிதியம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் நிலையத்திற்காகவும் அதன் பெயரிலும் கொடைகள், விருப்பாவணக் கொடைகள், நன்கொடைகள், ஒப்பப்பணங்கள், உதவு தொகைகள், கட்டணங்கள் அல்லது மானியங்கள் என்றவகையாக இதுகால வரை பெறப்பட்ட அல்லது இதன் பிறகு பெறப்படவேண்டிய எல்லாப் பணங்களும் சபை தீர்மானிக்கின்றவாறு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வங்கிகளில் நிதியத்தின் வரவுக்கு வைப்பிலிடப் படுதல் வேண்டும்.

(2) நிலையத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளைப் பிரயோகித்தல், நிறைவேற்றுதல் மற்றும் புரிவதில் அதனால் உறப்பட்ட செலவுகளைக் கொடுத்துத் தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிலையம் அசையும் மற்றும் அசையாச் சொத்தை வைத்திருக்கலாம்.*

**12.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, நிலையம் ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, குத்தகை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசையும் மற்றும் அசையா ஆதனத்தைக் கொள்ளுவதற்கும் வைத்திருப்பதற்கும் சட்டத்தில் இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டும் என்பதுடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் விற்றல், ஈடு வைத்தல், குத்தகைக்கு விடுதல், பரிமாற்றுதல் அல்லது வேறு வகையாக அதனை கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடன் இச் சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கு அமையவும் நிலையத்தினால் வைக்கப்படுதல் வேண்டும்.

*பணம் மற்றும் ஆதனத்தைப் பயன்படுத்துதல்.*

**13.** எவ்வாறாயினும் பெறப்பட்ட நிலையத்தின் பணங்கள் மற்றும் ஆதனங்கள், இதன்கண் எடுத்துக்கூறப்பட்டவாறான அதன் குறிக்கோள்களின் மேம்படுத்தலை நோக்கி மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் பாகம் எதுவும் சபையின் உறுப்பினர்களுக்கு பங்கிலாபம், மிகையூதியம், இலாபம் அல்லது எவ்வாறாகவும் வேறுவகையாக நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ செலுத்தப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் ஆகாது.

*கலைத்தலின் மீது எஞ்சியுள்ள ஆதனங்கள்.*

**14.** (1) நிலையம் கலைக்கப்படுவதன்மேல், அதன் எல்லாத் தனிசுகள் மற்றும் பொறுப்புக்களைக் கொடுத்துத் தீர்த்ததன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியுள்ள விடத்து, அத்தகைய ஆதனம் சபையின் உறுப்பினர்களுக்கு மத்தியில் விநியோகிக்கப்படுதல் ஆகாது. ஆனால் நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏதேனும் வருமானம் அல்லது ஆதனத்தை விநியோகிப்பதிலிருந்து வேறு ஏதேனும் நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் விதிகளால் தடைசெய்யப்பட்ட நிலையத்தின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களுக்கு வழங்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தோதான நிறுவனம் அல்லது நிறுவனங்கள், பொதுக்கூட்டமொன்றில் சமுகமளித்த உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் கலைக்கப்படு வதற்கு உடனடுத்து முன்னர் சபையின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*கணக்குகளின் கணக்காய்வு.*

**15.** (1) நிலையம், அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் நிலையத்தின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்கள் வைத்திருக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(2) நிலையத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) நிலையத்தின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின்படி, கணக்காய்வாளர் தலைமை யதிபதி அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக “தகைமைபெற்ற கணக்காய்வாளர்” என்பது -

(அ) சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக் காளர்கள் நிறுவனத்தின் அல்லது வேறு ஏதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவுள்ளவரும் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டுள்ளவருமான தனியாள்; அல்லது

(ஆ) எந்த கணக்காளர்கள் குழுமம் ஒன்றின் வதிவுள்ள பங்காளர்கள், சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்கு அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அந்த கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

ஆண்டறிக்கை.

**16.** (1) சபை, ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிலையத்தின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டுடன் தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துப் பின்வரும் ஆண்டின் ஆறுமாதங்கள் முடிவுறும் முன்னர் நிலையமானது அப்போதைக்கு எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அந்த அமைச்சரின் அமைச்சின் செயலாளருக்கு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது நிலையத்தினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதிகள் தொடர்பான தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

நிலையத்தின் இலச்சினை.

**17.** (1) நிலையத்தின் இலச்சினை, 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அத்தகைய எண்ணிக்கையிலான ஆட்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாசனத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் சமுகமளித்திருந்தமைக்கு அத்தாட்சியாக அச்சாசனத்தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கையொப்பமிடலானது சாட்சியாக எவரேனும் ஆள் கையொப்பமிடுதலிருந்தும் தனிவேறானதாத லும் வேண்டும்.

(2) நிலையத்தின் இலச்சினை, 10 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஆட்களின் கட்டுப் பாட்டில் இருத்தல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

**18.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங் கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதியும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்கு விதியும், வர்த்தமானியில் அத்தகைய ஒழுங்குவிதியின் வெளியீட்டுத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் பாராளு மன்றத்தின் முன்னர் இடப்படுதல் வேண்டும்.

(4) பாராளுமன்றம் எத்தேதியன்று ஒழுங்குவிதியை அங்கீ கரித்துள்ளதோ அத்தேதியைக் குறித்துரைக்கும் அறிவிப்பொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப் பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி எத்தேதியன்று ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

குடியரசின் உரிமைகளைப் பேணுதல்.

**19.** இச்சட்டத்தில் உள்ளடங்கியுள்ளது எதுவும் குடியரசின் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பொருள்கோடல்.

**20**. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய:-

"அழகியல்" என்பது, இசை, நாடகம், கலை, சிற்பவேலை உட்பட நுண்கலைகள் மற்றும் கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் மற்றும் சினிமாத்துறையில் ஏதேனும் செயற்பாடு உட்பட இலக்கியக்கலைகள் எனப்பொருள் படும்; அத்துடன்

''அமைச்சர்'' என்பது, நிலையம் குறித்துரைக்கப்பட்ட அமைச்சின் அமைச்சர் எனப் பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**21**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*